1975 மார்ச் 22]

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, பணி வரன் முறைப் படுத்தப்படாத அரபு முன்ஷிகள் இந்த மாவட்டத்தில் எத்தனை பேர்கள் இருந்து வருகின்றார்கள் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அவர்களுடைய எண்ணிக்கைபற்றி விவரம் இல்லை. ஆனால் இயக்குநர் அவர்களிடத்திலிருந்து அதைப்பற்றி விளக்கங்களைப் பெற்று, பரிசீலனை செய்து, தமிழ்நாடு தேர்வாணைக் குழு இசைவைப் பெற்று டிசம்பர் 1974-ல் தமிழ்நாடு கல்வி சார்நிலைப் பணி முறப்பட்ட பதவிகளைப் பற்றி, தக்க திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அதை நடைமுறைப் படுத்த வேண்டும் என்று இயக்குநருக்கு ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, இந்த அரபு மொழி ஆசிரியர்கள் தவிர, தமிழ் ஆசிரியர்கள் தவிர, வேறு மொழி ஆசிரியர்கள் யாராவது பணி வரன்முறைப்படுத்தப்படாமல் இருக்கின்றார்களா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது அரபு முன்ஷிகள் பற்றிய கேள்வியாக இருப்பதன் காரணமாக, அது பற்றிய விவரங்கள் இல்லை.

[பிற்பகல் 4-10]

Government Secondary School for Girls, Madurai.

*165 Q.—THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that the girls and the teachers in the Government Secondary School for Girls, Madurai, are undergoing a lot of difficulties for lack of proper accommodation facilities; and

(b) if so, whether the Government will take immediate steps to provide the same ?

மதுரை அரசினர் பெண்கள் இடைநிலைப் பள்ளி.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மதுரை அரசினர் பெண்கள் இடைநிலைப் பள்ளியில் ஒழுங்கான இடவசதி இல்லாததனால் அங்கு மாணவிகளும் ஆசிரியைகளும் பெரும் இடர்ப்பாட்டுக்கு ஆளாகின்றனரா ?

(இ) ஆமெனில், போதிய இடவசதியளிக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம். குறைபாடுகளை நீக்குவதற்கு முயற்சி நடைபெறுகிறது.

(Both Thiru P. R. Thomas and Thiru D. Santosham rose............)

Mr. CHAIRMAN: The hon. Member Thiru Thomas will have the first chance as the main question was put by him.

(பிற்பகல் 4-10).

திரு. பி. ஆர். தாமஸ் : தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சியின் புதிய கட்டிடத்திற்கு இப்போதுள்ள அலுவலகம் மாற்றப்படுமானால் இப்போதுள்ள அலுவலகத்தை முன்னாள் அரசுப் பள்ளி பணியாற்றிய அதே இடத்திற்கு மீண்டும் மாற்றுவதற்கு அரசு முன்வருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதனுடைய நிலை என்ன என்று இப்போது தெரியவில்லை. ஆனால், இந்தத் துறைகள் மதுரை மாநகராட்சி மன்றத்தின் கீழ் இருப்பதன் காரணமாக, பொதுப் பணித்துறை எந்தப் பழுதும் செய்ய முடியாமல் இருக்கிறது. பொதுப்பணித் துறைக்கு அதை மாற்ற வேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அப்படி பொதுப் பணித்துறைக்கு மாற்றப்படுமானால், இந்தச் சிலபல குறைகளும் இல்லாமல் நீங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம். ஆகவே இப்போது பொதுப் பணித்துறைக்கு மாற்றுவதற்கான முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம்.

திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, அந்த இடம் முன்பு மதுரை ஹெட்குவாட்டர்ஸ் ஆஸ்பத்திரியாக இருந்தது. அது பெரிய ஆஸ்பத்திரி இருந்த இடம். அந்த இடத்தில் மாநகராட்சி காரியாலயத்தை வைத்துக்கொள்வதற்கு என்றுதான் அனுமதி கொடுக்கப்பட்டது. அது முழுவதும் அரசாங்கத்தின் இடம். ஆஸ்பத்திரி நடந்து கொண்டிருந்த இடம். அதிலே புதிய ஆஸ்பத்திரி எர்ஸ்கின் ஆஸ்பத்திரி வைகைக்கு வடகரையில் கட்டிய பிறகு, அந்த இடம் காலியாக இருந்து, அதிலே பெண்கள் பாடசாலை ஒன்று வைக்கப்பட்டது. பழையபடி அங்கே முனிசிபல் ஆபிசுக்கு இடமில்லை என்று சொல்லிவிட்டு இந்த இடத்தை முனிசிபாலிட்டிக்குக் கொடுத்துவிட்டு, பெண்கள் பள்ளிக்கூடத்தை வேறு இடத்திற்கு மாற்றினார்கள். அதனால்தான் இடவசதி இல்லையென்ற கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இப்போது மாண்புமிகு திரு. பி. ஆர். தாமஸ் அவர்களும் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். விஷயம் அதுதான். ஆகவே முன்பு இருந்த இடத்திற்கு அந்தப் பெண்கள் பாடசாலையை மாற்றுவதற்கு அரசு சம்மதிக்குமா என்று அறிய விரும்புகிறேன். கார்ப்பரேஷன் ஆபிசை புதிய கட்டிடத்திற்கு மாற்றிய பிறகு, அந்த இடம் அரசாங்க இடம். அது காலியாகிவிடும். ஆகவே அந்த இடத்தைப் பாடசாலைக்குக் கொடுத்துவிட அரசாங்கம் சம்மதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாநகராட்சி மன்றம் அதற்கான சொந்த இடத்திற்குச் சென்ற பிறகு, அது இருந்த இடத்தைப் பயன்படுத்த வேண்டுமென்பதைப் பற்றி யோசிக்க வேண்டும். இப்போது பள்ளி இருக்கிற இடத்தையே பழுது

1975 மார்ச் 22]

பார்த்து அல்லது சீர்படுத்தி வைத்துக்கொள்வதா அல்லது பழைய இடத்திற்கே கொண்டுபோவதால் அந்தப் பள்ளிக்கு நன்மைகள் ஏற்படுமா என்ற இந்த இரண்டையும் ஆராய்ந்து பார்த்து, எது சிறப்பாக இருக்குமோ அதைச் செய்வதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளலாம்.

திரு. கே. எஸ். கணபதி : தலைவர் அவர்களே, தனியார் பள்ளி ஒன்று துவங்க இருந்தால், அதற்கென்று சிலபல விதிகள் உண்டு. அந்த விதிகளுக்கு உட்பட்டிருந்தால்தான், பள்ளிகளைத் திறக்க அனுமதிக்கப்படுகிறது. அந்தமாதிரி விதிமுறைகள் அரசுப் பள்ளிகளுக்குக் கிடையாதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அரசுப் பள்ளிகளுக்கும் அந்த விதிமுறைகள் உண்டு. ஏற்கனவே இருக்கின்ற நிலைமையிலே, மாநகராட்சி மன்ற அலுவலகத்தை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்ட காரணத்தினால், அதற்குரிய இடத்தைக் கொடுக்கும்போது அங்கே பெண்கள் கல்லூரி இருக்கின்ற காரணத்தால் பக்கத்திலேயே இது இருக்கலாம் என்ற கருத்தின் அடிப்படையிலே இந்த மாற்றம் கல்வித் துறைக்கும் மாநகராட்சி மன்றத்திற்கும் இடையே ஏற்பட்ட இசைவின் பேரிலே செய்யப்பட்டது. இடவசதி குறைவாக இருப்பதை நாம் சீர்படுத்த வேண்டுமென்ற அளவுக்கு நாம் முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் அவர்கள் எடுத்துத் தெரிவித்ததைப் போன்று, மாநகராட்சி சொந்தக் கட்டிடத்திற்குப் போன பிறகு, அந்தக் கட்டிடத்தைப் பயன்படுத்துவதா அல்லது இதையே பயன்படுத்துவதா என்பதைப்பற்றி அரசு பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. அதை முறையாகப் பரிசீலனை செய்ய முயற்சியை மேற்கொள்ளலாம்.

திரு. க. அறிவழகன் : தலைவர் அவர்களே, மதுரை நகரத்திலே இருக்கும் இந்தப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியைப் போல சென்னை நகரத்தில் தியாகராயநகர் மற்றும் வேறு பல இடங்களிலே இப்படிப்பட்ட இட நெருக்கடி இருக்கின்றது. இப்படி பல பள்ளிகள் இருக்கின்றன. பள்ளிக் கட்டிடங்களுக்கு என்று தனியாக ஒரு வாரியம் அமைக்கப்படுமென்று ஒரு செய்தி வந்தது. அவ்வாறு விரைவில் வாரியம் ஏதாவது அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இன்று அரசினிடத்திலும், உள்ளாட்சி மன்றங்களிடத்திலும் பணம் இல்லாத நிலையில் தொடக்கப் பள்ளிகளுக்கான கட்டிடங்களைக் கட்டுவதற்கு என்று வாரியம் ஒன்று அமைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆயுள் காப்பீட்டுக் கழகத்தினிடத்திலிருந்து நிதி உதவி பெற்று கட்ட, இந்த வாரியம் அமைக்கலாம் என்று நாங்கள் முயற்சி செய்தோம். இந்த நான்கு ஐந்து ஆண்டுகளாக அதைப்பற்றி ஆயுள் காப்பீட்டுக் கழகத்தினரிடம் கேட்டுக் கொண்டிருந்தோம். அவர்கள் ஒத்துழைப்புத் தர மறுக்கிறார்கள். அவர்கள் ஒத்துழைப்பு தந்தால், ஒரு பத்து கோடி ரூபாய் அளவுக்கு உதவி கொடுத்தால், கட்டிடங்களைக் கட்டி முடித்துவிட்டு ஊராட்சி மன்றமும் அரசாங்கமும் அந்தக் கடனையும் வட்டியையும் அவர்களுக்குத் தொடர்ந்து கட்டிக் கொண்டு வந்து விடலாம் என்ற அளவில் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். ஆயுள் காப்பீட்டுக் கழகம் உதவி செய்ய

முன்வருமானால், அந்த வாரியம் அமைக்கலாம். உள்ளாட்சித் துறை சார்பாகவே அந்த வாரியத்தை அமைப்பதாக இருந்தோம். டி.ஆர்.டி. அவர்களைத் தலைவராக்கி அந்த வாரியத்தை அமைக்கலாம் என்று ஒரு குறிப்பு இருந்தது. ஆனால் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் ஒத்துழைப்பு நமக்குக் கிடைக்கவில்லை.

House Rent Allowance to the Government School Teachers of Ambattur.

*166. Q.—THIRU K. ARIVAZHAGAN : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Government have sanctioned House Rent Allowance to the Government School Teachers of Ambattur Centre belonging to Villiwakkam Range from 1st April 1967 ;

(*b*) if so, whether the Aided School teachers were also sanctioned the same ; and

(*c*) if not, the reasons therefor ?

அம்பத்தூரில் இருக்கும் அரசினர் பள்ளி ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப்படி.

திரு. க. அறிவழகன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) வில்லிவாக்கம் சரகத்தைச் சேர்ந்த அம்பத்தூரில் இருக்கும் அரசினர் பள்ளி ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப்படி 1-4-1967 முதல் கொடுக்க அரசு அனுமதி வழங்கியுள்ளதா?

(இ) ஆமெனில், மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்கட்கும் வீட்டு வாடகைப்படி அனுமதிக்கப்பட்டதா?

(உ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) and (உ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

Pay Scales among Last Grade Servants of Aided and Government Colleges.

*167. Q.—THIRU K. ARIVAZHAGAN : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the pay scales recommended by the Second Tamil Nadu Pay Commission have been applied to all the Last Grade Servants of the Aided Colleges ;